உறுப்பினர்களுக்கோ எந்த உள்நோக்கமும் கற்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதில் தவறு இருப்பின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறோம்.''

[முற்பகல் 9-30]

'' வேறு ஏதாவது தி.மு.க. ஆட்சி செய்திருந்தால் தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது '' என்ற சொற்றொடரை உறுப்பினர் பேசவும் இல்லை, அவைக் குறிப்பிலும் இல்லாததால் இம் மாதிரியாகப் பிரசுரிப்பது, உறுப்பினரது கருத்துக்கு வேறுவித மாகப் பொருள் கற்பிப்பதற்கு ஏதுவாக முடிந்துவிடும். ஆகவே, இதுபோன்று அவையில் சொல்லாத சொற்றொடர்களை, உறுப் பினர்கள் வாயிலாகக் கூறுவதுபோல் பத்திரிகைகள், குறிப்பாக 'அண்ணா' பத்திரிகை, வெளியிடாமல் இருக்க வேண்டுமென எச்சரிக்கிறேன்.

3 அறிவிப்புகள்

(அ) கவன ஈர்ப்பு ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 41-வது விதி யின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினைக் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றினை திரு. மா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்படுகிறது.

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர் களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 164-வது விதி யின் கீழ் 1977-78 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.